# 11 இறைவார்த்தை தரும் வெற்றி

ஒருநாள் பாடசாலை முடிவடைந்த பின்னர் ஆனந்தனும் இனியவனும் வீட்டை நோக்கி சென்று கொண்டிருந்தனர்.

ஆனந்தன் : அந்த மரத்தைப் பார்! கனிந்த பழங்களைப் பார்! சுவையான பழம்! இனிமையான பழம்!

இனியவன் : ஆ! என்ன அழகு! பழம் சுவையாக இருக்கும். தடியால் அடிப்போம் வா! மரத்திலிருந்து விழும் பழங்களை பொறுக்கிக் கொண்டு ஓடிவிடுவோம்.

ஆனந்தன் : சரி! சரி! வா! நானும் உதவி செய்கின்றேன்.

இனியவன் : (பழங்களுக்கு குறிவைத்து தடியை ஓங்கி அடிக்க முற்படுதல்) முடியாது! முடியாது! என்னால் முடியாது! நான் செய்யப்போவது தவறு.

ஆனந்தன் : என்ன? ஏதோ நினைத்த வண்ணமாக மேலே பார்த்துக் கொண்டிருக்கின்றாய்? அடிடா... அடி..... பலமாக...... அந்த கிளையில் தொங்கி கொண்டிருக்கும் பழக்குலைக்கு அடி....

இனியவன் : ஆனந்தா! என்னால் முடியாது. ஆசிரியர் அன்று ஓய்வுநாள் பாடசாலையில் கூறிய இறைவார்த்தை என்காதில் ஒலிக்கின்றது. அன்று ஆசிரியர் கற்பித்த பாடம் என் மனதில் நன்கு பதிந்துள்ளது.

ஆனந்தன் : நேற்று என்னால் ஓய்வுநாள் பாடசாலை வரமுடியவில்லை. நீ கற்ற பாடத்தை எனக்கு கூறுவாயா?

(இருவரும் திருவிவிலிய பகுதியை வாசிக்க ஆயத்தமாதல்)

இனியவன் : லூக்கா நற்செய்தி நூல் 4 : 12 இல் இயேசுவின் திருமுழுக்கின் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகளை பார்ப்போம்.

ஆனந்தன் : இயேசு எங்கு சென்றார்? ஏன் சென்றார்?

இனியவன் : இயேசு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு பாலை நிலத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் நாற்பது நாள் அலகையினால் சோதிக்கப்பட்டார். அந் நாட்களில் அவர் ஒன்றும் சாப்பிடவில்லை. பணியை ஆரம்பிக்கும் முன்னர் இறைவேண்டுதலுடன் இறைவழி காட்டலை நாடிநின்றார். அவர் பசியுற்றார். மூன்று சோதனைகளுக்கு முகம் கொடுத்தார்.

ஆனந்தன் : **இயேசுவுக்கு ஏற்பட்ட முதலாவது சோதனை என்ன?**

இனியவன் :

| அலகை | இயேசுவின் மறுமொழி |
|---|---|
| நீர் இறைமகன் என்றால் இந்தக் கல் அப்பமாகும்படி கட்டளையிடும். லூக்கா 4 : 3 | மனிதர் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை. லூக்கா 4 : 4 |

இயேசுவின் மறுமொழிகள் மகத்தானவை. அவர் இறை வார்த்தைகளை அறிந்திருந்தமையால் அலகையின் சோதனைக்கு இணங்கவில்லை. (இணைச்சட்டம் 8 : 3)

இறைமகனாகிய இயேசு ஒரு சொல்லால் கற்களை அப்பமாக மாற்றி இருக்கலாம். ஆனால் அவரது பணிக்கு அது பொருத்தமற்ற வழியாக இருந்தமையால் அவர் அதற்கு இடமளிக்கவில்லை.

ஆனந்தன் : **இயேசுவுக்கு ஏற்பட்ட இரண்டாவது சோதனை என்ன?**

இனியவன் :

| அலகை | இயேசுவின் மறுமொழி |
| --- | --- |
| உலகத்தின் அரசுகளை அவருக்கு நொடிப்பொழுதில் காட்டி "நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையதாகும்." லூக்கா 4 : 5 -7 | "உன் ஆண்டவராகிய கடவுளை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக!" லூக்கா 4 : 8 |

நாம் ஒரே இறைவனையே வணங்கி அவருக்கே முதலிடம் அளிக்க வேண்டும் (இணைச்சட்டம் 6 : 13)

உலக தேவைகளுக்கு அடிமையாகி அலகையை வணங்கி வாழுமாறு வேண்டினான். இயேசு எழுதப் பட்டுள்ள இறைவாக்குகள் மூலமாக மறுமொழி வழங்கினார்.

ஆனந்தன் : **இயேசுவுக்கு ஏற்பட்ட மூன்றாவது சோதனை என்ன?**

இனியவன் :

| அலகை | இயேசுவின் மறுமொழி |
| --- | --- |
| "நீர் இறை மகன் என்றால் இங்கிருந்து கீழே குதியும். உம்மைப் பாதுகாக்கும்படி கடவுள் தூதருக்கு உம்மைக் குறித்து கட்டளையிடுவார். உமது கால் கல்லில் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளால் உம்மைத் தாங்கிக் கொள்வார்கள்" லூக்கா 2:9-12 | "உன் கடவுளாகிய ஆண்டவரை சோதிக்க வேண்டாம்." லூக்கா 4 : 12 |

இது அதிகாரத்தை காட்டும் சோதனை பலம்வாய்ந்த சோதனை. இயேசு இறை வார்த்தையால் சோதனையை வெற்றி கொண்டார். (**இணைச்சட்டம்** 6: 16)

ஆனந்தன் : நீ ஏன் மாம்பழக் குலைகளை பார்த்துக்கொண்டிருந்தாய் என்று எனக்கு புரிந்தது. ஆசிரியர் கூறிய வார்த்தைகள் உன் நினைவுக்கு வந்துள்ளன. தூய ஆவியானவரே உன்னை வழிநடத்தினார் என அறிந்து கொண்டேன். அழகான அறிவுரைகளை எனக்கு புரியவைத்த உனக்கு என் நன்றிகள்! நாம் நற்செயல்களை செய்வதற்கு தூய ஆவியானவரின் வழிகாட்டுதல் எமக்கு கிடைக்கின்றது என்பதை நன்கு புரிந்து கொண்டேன்.

இனியவன் : சரி வா, போகலாம்.

**மனனவசனம்:**
***எபேசியர் 6:17-18***

**எல்லா வேண்டல்களையும் மன்றாட்டுக்களையும் இறைவனிடம் எழுப்புங்கள். எப்போதும் தூய ஆவியின் துணை கொண்டு வேண்டுதல் செய்யுங்கள். இதில் உறுதியாய் நிலைத்திருந்து விழிப்பாயிருங்கள். இறை மக்கள் அனைவருக்காகவும் மன்றாடுங்கள்.**
**எபேசியர் 6 : 17 - 18**

செயற்பாடு

1. சோதனைகளின் போது இயேசு கொடுத்த பதில்களை பழைய ஏற்பாட்டிலிருந்து தேடி எழுதுக.

2. இயேசு கற்றுக்கொடுத்த இறைவேண்டுதலில் சோதனைகளி லிருந்து விடுபடுதல் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது?